# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 07.10.2020 | 1) அரசு ஆணை எண் 48 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 22.05.2012ல் உதவி செயற் பொறியாளர் நிலையில் ஒரு பணியிடம் இம்மாநகராட்சிக்கு அனுமதிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி இம்மாநகராட்சிக்கு உதவி செயற் பொறியாளர் நிலையில் 1 பணியிடம் நிரந்தர அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. | 162) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| வ.எண். | பணியிடத்தின் பெயர் | பணி விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் நிபந்தனைகள் |
| 1 | உதவி செயற் பொறியாளர் | 1) உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் நிலைகளில் பணிபுரிந்து வருபவர்களை பதவி உயர்வு செய்து பணியமர்த்துதல்.<br>2) உதவிப் பொறியாளர் அல்லது இளநிலைப் பொறியாளராக மைய அலுவலக பொறியியல் பிரிவில் ஓராண்டுக்கு குறையாமலும், வார்டு அலுவலகங்களில் மூன்றாண்டுகளுக்கு குறையாமலும் பணிபுரிந்திருத்தல் வேண்டும். |
| | இதன்படி உதவி செயற் பொறியாளர் நிலையிலான பணியிடம் உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகிய நிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் ஒருங்கிணைப்பு பணி மூப்பின் அடிப்படையில் தகுதியானவர்களை பதவி உயர்வு மூலம் பணியமர்த்திட பணி விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.<br>மேற்படி இம்மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட உதவி செயற் பொறியாளர் நிலையில் அனுமதிக்கப்பட்ட ஒரு பணியிடத்தினை பூர்த்தி செய்து கொள்வதற்கு இவ்வலுவலக 05.04.2013ம் தேதிய இ2/13135/2012 எண்ணிட்ட பணி மூப்பு பட்டியல் வெளியிடப்பட்டது. மேற்படி பணிமூப்பு பட்டியலை தள்ளுபடி செய்தும் தன்னை உதவி செயற் பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு செய்திடவும் உரிய பரிகாரம் கோரி சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு. ராமச்சந்திரன் (நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தில் இருந்து பணி பெயர் மாற்றம் செய்யப்பட்ட உதவி பொறியாளர் ) ரிட் மனு எண். 5932/2013 வாயிலாக வழக்கு தொடரப்பட்டு மேற்படி பணி மூப்பு பட்டியலை செயல்படுத்திட இடைக்கால தடை உத்திரவு பெற்றிருந்தார்.<br>இதனைத் தொடர்ந்து நிலுவையில் இருந்த இவ்வழக்கின் தொடர்ச்சியாக வழக்கு தொடர்ந்திருந்த திரு. ராமச்சந்திரன் தன்னால் தொடரப்பட்ட வழக்கினை திரும்ப பெறுவதாக சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் | |

செய்ததன் தொடர்ச்சியாக தனியரது கோரிக்கை ஏற்கப்பட்டு மேற்படி வழக்கு தள்ளுபடி செய்து 07.09.2020ல் தீர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது யாதொரு நீதிமன்ற தடையோ / வழக்கோ இல்லாத காரணத்தால் அனைத்து தகுதிகளும் நிறைவு செய்வதால் திரு.மு. சரவணன் இளநிலை பொறியாளர் தன்னை ஏற்கனவே வெளியிடப்பட்ட இ2/13135/2012 நாள் 05.04.2013ம் தேதிய பணிமூப்பு பட்டியலின் அடிப்படையில் உதவி செயற் பொறியாளர் பணியிடத்திற்கு முன் தேதியிட்டு பதவி உயர்வு வழங்குமாறும் முன் தேதியிட்டு பதவி உயர்வு வழங்கும் நேர்வில் மேற்படி பணியிடத்திற்கான ஊதியம் ஏதும் முன் தேதியிட்டு கோரமாட்டேன் என 08.09.2020ல் விண்ணப்பம் அளித்துள்ளார்.

உதவி செயற் பொறியாளர் பணியிடமானது மேற்படி சுட்டிகாட்டப்பட்ட விவரப்படி வழக்கின் மீதான இடைக்கால தடை காரணமாக பூர்த்தி செய்திட இயலாத நிலை ஏற்பட்டு காலியாக தொடர்ந்து இருந்து வருகிறது. தற்போது மேற்படி வழக்கு திரும்பபெறப்பட்டதன் காரணமாக 05.04.2013ம் தேதிய பணி மூப்பு பட்டியலுக்கு தடையாணை பெறப்பட்டிருந்த ரிட் மனு எண் 5932/2013ஐ தள்ளுபடி செய்து சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணியிடத்தினை பூர்த்தி செய்திட தடை ஏதும் இல்லை.

05.04.2013ம் தேதிய பணிமூப்பு பட்டியலுக்கு எந்தவிதமான ஆட்சேபணைகளும் மாநகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெறாத நிலையில் தற்போது வழக்கு தள்ளுபடி செய்து உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து 05.04.2013ம் தேதிய பணிமூப்பு பட்டியலை அவ்வாறே இறுதி செய்து உத்திரவிடப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 05.10.2020ல் ஆணையர் அவர்களால் 05.04.2013ம் தேதிய பணி மூப்பு பட்டியலை இறுதிசெய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே பொறியியல் பிரிவில் பணியில் மூத்தவரும் மேற்படி பணிமூப்பு பட்டியலில் வரிசை எண். 1ல் இடம் பெற்றுள்ளவருமான திரு.மு. சரவணன் இளநிலை பொறியாளர் உதவி செயற் பொறியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கிட தகுதியானவர் ஆகிறார்.

தூத்துக்குடி மாநகராட்சிக்கு மைய அலுவலகத் திற்கென தனியாக உதவி இளநிலை பொறியாளர் நிலையில் பணியிடம் ஏதும் அனுமதிக்காத நிலையில் மைய அலுவலகத்தில் 1 வருடம் பணிபுரிய வேண்டும் எனற கேள்வி எழவில்லை. பொறியியல் பிரிவில் பணிமூப்பு பட்டியல் வெளியிட்ட நாளில் 18 ஆண்டுகளுக்கும் மேலாக இளநிலை பொறியாளர் பணியிடத்தில் பணிபுரிந்து வந்துள்ளார். எனவே பணிவிதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தகுதியினை பெற்றுள்ளார். தனியர் மீது மாநகராட்சி ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு பணி விதிகள் 8(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை.

மேலே சுட்டிக்காட்டியபடி பணிமூப்பு பட்டியலுக்கு எதிராக பெறப்பட்டிருந்த தடையாணை வழக்கு தள்ளுபடி

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டதை தொடர்ந்து இறுதி செய்யப்பட்ட பணிமூப்பு பட்டியலின்படி வரிசை எண். 1ல் இடம் பெற்றுள்ள திரு.மு. சரவணன் இளநிலை பொறியாளரை 05.04.2013ம் தேதி முதல் உதவி செயற் பொறியாளர் நிலையிலான பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கியும் இதற்கான பணபலன்களை பொறுத்தமட்டில் 05.04.2013 முதல் ஊதியத்தினை கருத்தியலாக (Notional) நிர்ணயம் செய்தும் தற்போது மாமன்றம் ஒப்புதல் பெறப்பட்டு பதவி உயர்வு வழங்கும் நாள் முதல் அரசின் உறுதியாக்க ஆணை பெற்று ஊதியம் வழங்குவதற்கு ஏதுவாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>**1)** மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.<br>**2)** தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 106 2 (பி) ன் படி உதவி செயற் பொறியாளர் பணியிடம் வகுப்பு – II யை சார்ந்த பணியிடமாகும் இப்பணியிடத்தினை பொறுத்தமட்டில் மாமன்றம் ஒப்புதலுடன் பதவி உயர்வு செய்து ஆணை பிறப்பித்தும், அதனை தொடர்ந்து அரசின் உறுதி ஆக்க ஆணை பெறுதல் வேண்டும். எனவே திரு. மு. சரவணன் இளநிலை பொறியாளரை 05.04.2013ம் நாளைய பணி மூப்பு பட்டியலின் அடிப்படையில் உதவி செயற் பொறியாளர் நிலையிலான பணியிடத்திற்கு 05.04.2013 முதல் முன் தேதியிட்டு பதவி உயர்வு வழங்கவும் பணபலன்களை பொறுத்தமட்டில் 05.04.2013 முதல் கருத்தியலாக (Notional) நிர்ணயம் செய்து மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு பதவி உயர்வு வழங்கும் நாள் முதல் பணபலன்கள் பெற அனுமதித்தும் இது தொடர்பான விரிவான முன்மொழிவினை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பி வைத்து அரசின் உறுதியாக்க ஆணை பெற மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம். **இ2/13135/2012** | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 07.10.2020